**ஓம் ஸ்ரீ சாயிராம்**
**பிரசாந்தி சந்தேஷ்**
**வினா விடை நேரம்.**

## வினா எண் 313: நன்மை அல்லது மகத்துவத்தை அடைவதா?

**மார்ச் 30 , 2024**

## தலைப்பு நற்பண்புகளை வளர்த்து கொண்டு சத்வகுணத்துடன் நன்னடத்தை உடையவர்களாக வாழ்வது அல்லது பணம் புகழ் அதிகாரத்துடன் மேன்மையான வாழ்க்கை வாழ்வது.

*நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 65-70லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி*

கேள்வி:
ஸ்வாமி இன்றைய நாகரீக உலகில் மனிதர்கள் கடவுளிடம் நெருங்கிய அன்பு கொண்டவர்களாக இருக்கிறார்களா

ஸ்வாமியின் பதில்:
இன்றைய நாகரீக உலகில் மனிதர்கள் மேலோட்டமானவர்களாக செயற்கை தன்மையுடன் இருக்கிறார்கள்.வெளிப்புறத்தில் ஒருவருக்கொருவர் ஹலோ என்றும் நன்றி என்றும் சொல்லி கொண்டாலும் இன்றைய மனிதர்கள் சுயநலமிக்கவர்களாகவே இருக்கிறார்கள்.
இன்றைய அறிவியலின் துணை கொண்டு மனிதன் சந்திரனில் காலடி பதித்து விட்டான்.
ஆனால் தன் அருகேயே வசிக்கின்ற சக மனிதனிடம் அன்பு காண்பிக்க தவறி விடுகிறான்.
இன்றைய மனிதன் மீனை போல் நீந்தவும் பறவையை போல் பறக்கவும் செய்கிறான்.
ஆனால் இரண்டு மைல் தூரம் தன் சொந்த கால்களால் அவனால் நடக்க முடிவதில்லை.
லட்சகணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள வான மண்டலத்தை பார்க்க முடிகின்ற அவனால் தன் உட்புறமாக திரும்பி உள்ளே உறையும் கடவுளை பார்க்க முடிவதில்லை.
பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள இறைவனை தன் மன கடலில் பார்க்க மனிதனால் முடிவதில்லை. ஏனென்றால் அவனது மனக்கடல் நஞ்சு கடலாக தீய எண்ணங்கள் கொண்டதாக உள்ளது.

பணக்கார தேசமாக இருந்தாலும் பிரான்ஸ் நாடு போரில் தோல்வியைதானே தழுவியது. காரணம் அந்த நாட்டு இளைஞர்கள் தீய பழக்கங்களுக்கு அடிமையாகி பயனற்றவர்களாக இருந்ததுதான்.
இந்த ஆபத்து இன்றைக்கு உலகம் முழுவதும் பரவி விட்டது.

தன்னுடைய கீழ்தரமான புலன் இன்பங்களின் மீதே நாட்டம் கொண்டவனாக மனிதன் இருக்கும் வரை அவன் ஆன்மீகத்தில் முன்னேறி கடவுளை நெருங்குவது எப்படி சாத்தியமாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நாங்கள் வாழ்க்கையில் முன்னேற்றமடைய என்ன செய்ய வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
நீங்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.
அவை கடினமானதாக
இருக்கலாம்.ஆனாலும் சிரத்தையுடன் தொடர்ந்து அவற்றை முன்னெடுக்க வேண்டும்.வாழ்கையில்
உயர்ந்த குறிக்கோள்களை நிர்ணயித்து கொண்டு அவற்றை நோக்கி பயணிக்க வேண்டும்.பெறற்கரிய மனித பிறவி இதற்காகவே கொடுக்க பட்டுள்ளது.
நீங்களும் இறைவனும் ஒன்றே என்ற அடிப்படை சத்தியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.
மனிதன் தெய்வத்துவத்தை அடைவதற்கான பயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வர வேண்டும்.
இவ்வாறு செய்யும் போது தடைகளும் சறுக்கல்களும் வரத்தான் செய்யும்.கவனமுடன் இருக்க வேண்டும்.
இப்போது இந்த கொடைகானல் மலையில் ஏறும் போது லாரி பஸ் எல்லாமே மிகுந்த சப்தத்துடன் ஏறுகின்றன. ஆனால் இறங்கும் போதோ சப்தமில்லாமல் விரைவாக இறங்கி விடுகின்றன.
மனித வாழ்க்கையும் அப்படித்தான்.
முன்னேறுவது என்பது கடினமாகவும் தாழ்ந்து விடுவது என்பது இலகுவாகவும் நடந்து விடுகிறது.
ஒரு வில்லில் நாண் பூட்டி இழுக்கும் போது எந்த அளவுக்கு இழுக்கிறோமோ அந்த அளவுக்கு அம்பு அதிக தூரம் செல்லும்.
ஒரு ராக்கெட் கிளம்பும் போது சற்று பின்னோக்கி வந்து விட்டு பிறகு நெருப்பை கக்கிக் கொண்டு முன்னோக்கி பாய்கிறது.
அது போல் நீங்கள் அதிக மாக உழைக்கும் போது உங்களுக்கு பெரிய வெற்றி கிடைக்கிறது.
உங்களின் வெற்றி நீங்கள் முன்னெடுக்கும் உழைப்பை பொறுத்தே அமைகின்றது.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி வாழ்கையில் பணம் புகழ் பெற்று உயர்ந்த நிலையை அடைவது எவ்வாறு என்று எங்களுக்கு சொல்லுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
இது போன்ற ஆசைகள் மனதில் தோன்றுவதற்கு ஒரு போதும் அனுமதிக்காதீர்கள்.

அதிகாரம் பணம் புகழ் பெறுவதே வாழ்க்கையின் உச்சமாகும் என தவறாக எண்ணிகொண்டிருக்கிறீர்கள்.
சமுதாயத்தில் மிக உயர்ந்த நிலையை எப்படி யாவது அடைந்தது விட வேண்டும் என குறிக்கோள் ஏதும் வைத்து கொள்ளாதீர்கள்.
மாறாக சமுதாயத்தில் நல்லவராக நற்பண்புகளுடையவராக வாழ வேண்டும் என்பதே உங்கள் குறிக்கோளாக இருக்கட்டும்.
வாழ்கையில் உயர்ந்த நிலையை அடைவது என்பதைவிட நல்லவனாக இருப்பதே முக்கியமாகும்.
அதிகார பணபலத்துடன்உயர்ந்த நிலையில் இருப்பவன் கடவுளைகூட மினிதனாகவே பார்க்கிறான்.
மாறாக நற்பண்புகளுடன் நல்லவனாக இருப்பவன் ஒவ்வொரு மனிதனையும் கடவுளாகவே பார்க்கிறான்.
இராவணன் மிக உயர்ந்த நிலையில் இருந்த பேரரசன் தான்.அவன் ஸ்ரீராமரை ஒரு மனிதன் என்றே எண்ணினான்.
ஆனால் புருஷோத்தமரான ஸ்ரீ ராமரோ ஜடாயு போன்ற பறவைகளையும் அணில் போன்ற பிராணிகளையும் வானரர்களையும் கல்வி அறிவில்லாத குகன் போன்றவர்களையும் சபரி போன்ற பெண்மணிகளையும் விபீடணன் போன்ற அரக்கர்களையும் கூட கடவுளாகவே பார்த்தார்.
எனவே செல்வ சௌகரியங்களை தேடிபெற்று மேன்மையான வாழ்க்கை வாழ்வதைவிட நற்பண்புகளுடன் நல்லவனாக வாழ்வதற்கே நீங்கள் விருப்பம் கொள்ள வேண்டும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி சிறந்த அரசாங்கம் எப்படி செயல்பட வேண்டும் என்பதை தயவுசெய்து கூறுங்கள் ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்:
முன்மாதிரியான அரசாங்கம் என்றால் அங்கே மக்கள்,தாங்களாகவே முன்வந்து நாட்டின் சட்டங்களுக்கு கீழ் படிந்து நடப்பார்கள்.
ஒவ்வொருவரும் தங்களுக்கான கடமைகளை சரிவர செய்து வருவார்கள்.
ஆனால் இன்றோ தங்கள் உரிமைகளுக்காக போராடுகின்ற மனிதர்கள் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விடுகிறார்கள்.
மக்கள் ஒருபோதும் சோம்பலுக்கு இடம் கொடுக்க கூடாது.ஊழியர்கள் தாங்கள் வாங்குகின்ற சம்பளத்திற்கு நியாயமாக வேலை செய்ய வேண்டும்.
அப்படி செய்யவில்லை என்றால் அவர்கள் அரசாங்கத்தை ஏமாற்றுகிறார்கள் என்றே பொருள்.
மக்கள் சமரசம், ஒற்றுமை, ஒத்துழைப்பு, செயல்திறமை, பொறுப்புணர்வு, சுறுசுறுப்பு, திட்டமிடல் போன்ற ஆளுமை பண்புகளை வளர்த்து கொள்ள வேண்டும்.
ஒரு துண்டு துணியை எடுத்து கொள்ளுங்கள்.

அது கையால் கிழிக்க முடியாதபடி உறுதியாக உள்ளது.ஏனென்றால் நூல்கள் பின்னி பிணைந்தவாறு அது நெய்யபட்டிருக்கிறது.அந்த நூல்களை பிரித்து எடுத்து விட்டால் துணியை விரல்களாலேயே கிழித்து விட முடியும்.

உண்மையான பலம் என்பது ஒருமைபாட்டிலேதான் இருக்கிறது.

நடைபாதையில் கைத்தடியை வீசி வீசி நீங்கள் நடக்கலாம்.

அது எது வரை தெரியுமா.அடுத்தவரின் முகத்தை காயப்படுத்தாத வரை.

உங்களுக்கான உரிமை என்பது அடுத்தவர்களின் சுதந்திரத்தை பாதிக்காதவாறு இருக்க வேண்டும்.

அடிப்படை சமுதாய நலன்களை யாரும் மீறக்கூடாது.

தனி மனித சுதந்திரத்தை விட சமுதாய நலன் முக்கிய மானதாகும்.

நீங்கள் கற்ற கல்வி உங்களை சமுதாயத்தில் மேம்பட்ட மனிதராக ஆக்க வேண்டும்.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி இன்றைய காலகட்டத்தில் நாங்கள் பின்பற்ற வேண்டிய  முக்கிய கடமை பற்றி எங்களுக்கு சொல்லுங்கள் ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்:

பிரதி பலன் எதிர்பாராத தூய அன்பை நீங்கள் வளர்த்து கொண்டாலே போதும்.பக்தி, ஒழுக்கம்,சேவை, தியாகம், பணிவு போன்ற எல்லா நற்பண்புகளும் தானாகவே வந்து விடும்.

அன்பு இருக்கும் இடத்தில் அகந்தை, பொறாமை, வெறுப்பு,கர்வம் போன்ற மிருக குணங்களுக்கு இடமில்லாமல் போய்விடும்.

பாரிஸ் நகரத்தில் ஒரு பெண்மணி இருந்தார்.தன்னிடமிருந்த சொற்ப பணத்தில் வாழ்கை நடத்தி வந்தார்.

ஒரு நாள் சாலையோரத்தில் வீடில்லாத சிலர்  குளிரால் நடுங்கி கொண்டிருப்பதை பார்த்தார்.

அவருக்கு வேதனையாக இருந்தது.

எனவே போர்வைகளை வாங்கி கொண்டு போய் ஒவ்வொரு நாளும் அவர்களை தேடி சென்று கொடுத்து வந்தார்.

இந்த செய்தி அரசாங்கத்திற்கு தெரிய வந்தது.அவர்கள் இந்த பெண்மணியை கவுரவிக்க தீர்மானித்தனர்.

சில இளைஞர்களை நேரில் அனுப்பி வைத்து  பாராட்டினார்கள்

அவர்களிடம் அந்த பெண்மணி சொன்னார் என்னால் ஒரு சிலருக்குதானே உதவ முடிகிறது.அனைவரைக்கும் உதவ முடியவில்லையே என வருத்தமாக இருக்கிறது என்றார்.

இதேபோல் ஒரு ராணுவ வீரர்

நாட்டுக்காக போரில் பங்கு பெற்ற போது இரு கால்களையும் இழந்தார்.

தொடர்ந்து ராணுவத்தில் பணியாற்ற முடியாமல் போனது.

அவருக்கு கிடைத்த பணி இறுதி தொகையும் குறைவானதாகவே இருந்தது.
அவருடைய மேலதிகாரி கைச்செலவிற்கு சிறிது பணம் கொடுத்தார்.
ஆனால் ஊர் திரும்பும் போது வழியிலேயே அந்த பணமும் செலவாகிவிட்டது.மேற்கொண்டு பயணிக்க இயலாமல் வழியில் இருந்த தர்ம சத்திரத்தில் அவர் தங்கினார்.
இவருடைய நிலையை பார்த்து பள்ளி மாணவி ஒருவருக்கு இவர் மீது இரக்கம் உண்டாயிற்று.தோட்டத்தில் பழங்கள் பறித்து கொண்டு
தினமும் முன்னதாகவே புறப்பட்டு வழியில் சந்தையில் பழங்களை விற்று அதை கொண்டு உணவு வாங்கி இவருக்கு கொடுத்து வந்தார்.
சில நாட்கள் கழித்து ராணுவ வீரரின் மேலதிகாரி அந்த வழியாக வந்த போது இவரை பார்த்து விட்டார்.அடடா தன் சொந்த ஊருக்கு செல்வதற்கு பணம் இல்லாமல் இவர் இங்கேயிருக்கும் படி ஆயிற்றே என நினைத்தார்
அப்போது அந்த பள்ளி மாணவி இராணுவ வீரருக்கு வழக்கம் போல் உணவு கொண்டு வந்தார்.
இதை கண்டு ஆச்சரியபட்ட மேலதிகாரி அந்த மாணவியை பின்தொடர்ந்து அவர் வீட்டுக்கு சென்றார்.
மாணவியின் பொற்றோர் சீருடையில் ராணுவ அதிகாரியுடன் தங்கள் பெண் வருவதை பார்த்ததும் தங்கள் பெண் ஏதோ தவறு செய்து விட்டார் என எண்ணி கொண்டு கடிந்து பேச ஆரம்பித்தனர்.
உடனே ராணுவ அதிகாரி குறுக்கிட்டு அம்மா இப்பேர்பட்ட பெண்ணை பெற்ற நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்.இந்த உலகத்தில் இவரை போல் அன்பும் சேவை மனப்பான்மையும் கொண்டவர்கள் வெகு சிலரே இருக்கிறார்கள் என்று பாராட்டி நடந்ததை சொல்லி சில தங்க நாணயங்களை பரிசாக கொடுத்தார்.
அவர்களோ அய்யா இது போன்ற பரிசுகள் எதுவும் எங்களுக்கு வேண்டாம்.எங்கள் சொந்த உழைப்பில் சம்பாதித்து வாழ்க்கை நடத்தவே நாங்கள் விரும்புகிறோம் என்றனர்.
அவர்களின் நேர்மையை கண்டு மகிழ்ச்சி அடைந்த ராணுவ அதிகாரி தன் ஊருக்கு சென்றதும் நல்ல மணமகனை தேர்ந்தெடுத்து அந்த பெண்ணிற்கு திருமணம் செய்து வைத்தார்.

இதுவே தூய அன்பின் வெளிப்பாடாகும்
தன்னலமற்ற அன்பு பல்கி பெருககூடியதாகும்.சுயநலமிக்கவர்களாக இருப்பது குன்றி போய் இறந்து விடுவதற்கு சமமாகும்.

அனைவருக்கும் நன்றி.
வரும் நாட்களிலே நம் ஸ்வாமி யின் அருளுரைகளை மேலும் கேட்டு பயன் பெறுவோம்.

ஜெய் சாயிராம்.